# தொழில்நுட்ப நிறுவகம்

# மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை



# ஆண்டறிக்கையும் ஆண்டுக்குரிய கணக்குகளும்

# 2020

இவ்வாண்டறிக்கை, 2021.03.26 ஆம் திகதி நடைபெற்ற அதன் 232 ஆவது கூட்டத்தின்போது நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் அனுமதிக்கப்பட்டது.

## தொலைநோக்கு

தொழில்நுட்பக் கல்வியில் அதிசிறப்புநிலை வகிக்கும் மையமொன்றாக விளங்குதல்.

## பணிக்கூற்று

பிராந்தியத்தில் இயங்குநிலை தொழில்நுட்ப நிறுவகமொன்றாக விளங்குதலும் இலங்கையர் சமூகத்தின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கான முனைப்பான பங்களிப்பை வழங்குதலும்.

- சமூகத்தினதும் கைத்தொழிலாக்கத்தினதும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அடைந்துகொள்ளக்கூடிய, நெகிழ்வுப் பாங்கான, வினைத்திறனான கல்வி மற்றும் திறன் பயிற்சியை வழங்குதல்.
- புத்தாக்கமும் படைப்பாற்றலும் கொண்ட ஒரு சூழலைக் கட்டியெழுப்புதல்.
- தொழில்சார் தேவைகளுக்காக கைத்தொழில் துறையுடனும் வர்த்தக சமூகத்தினருடனும் உற்சாகமான கருத்தாடலொன்றை ஏற்படுத்திக்கொள்ளல்.
- சமூக, பொருளாதார மார்க்கங்களுக்காக திறந்துவிடப்படும் வாய்ப்புகளை இளைஞர்களுக்கு விஸ்தரித்தல்.

# 01. தகுதிவாய்ந்த அதிகாரியின் மீளாய்வு



மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் (ஐவுருஆ) முக்கியமாக இரசாயன, சிவில், மின், இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பம், பொறிமுறை, கடல்சார், கப்பல்துறை, பொலிமர் (பல்படி), புடவை ஆகிய துறைகளின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியை (னுவு) நடாத்துதல் தொடர்பில் வரவேற்பைப் பெற்ற, இலங்கையில் தொழில்நுட்பக் கல்வியில் முன்னணி வகிக்கும் ஓர் உயர்கல்வி நிறுவகமாகும்.

தகுதிவாய்ந்த அதிகாரி பதவி ஆண்டில் மூன்று தடவைகள் மாற்றமடைந்ததன் காரணமாகவும் கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாகவும் 2020 ஆம் ஆண்டு நிறுவகத்திற்கு சவால் மிகுந்ததாக விளங்கியது. மேலும் இந்நிறுவகம் 1,600 மாணவர்களுக்கு ஒரே தடவையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்த முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக 2020 சனவரி 1 ஆம் திகதி கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள் நியமிக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து அப்பதவிக்கு பேராசிரியர் எஸ்.எம்.ஏ. நாணாயக்கார அவர்கள் 2020 யூலை மாதம் 2 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக கலாநிதி சி.சுஜீவ லெவன்கமகே அவர்கள் 2020 அக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்.

ஆண்டின் ஆரம்பத்தில் நிறுவகம் இரண்டாவது மற்றும் நான்காவது அரையாண்டு பருவங்களுக்கான கல்விச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச்சென்றது. அம்மாணவர்களுக்கு அரையாண்டு பருவ இறுதிப் பரீட்சைகள் முறையே பெப்ரவரி, சனவரி மாதங்களில் நடைபெற்றது. பொலிமர் (பல்படி) தொழில்நுட்ப கற்கைப் பிரிவினால் 2020 மார்ச் 13 ஆம் திகதி 'பொலிமர்ரெக் 20' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக மார்ச் மாத இறுதியில் நிறுவகம் தற்காலிகமாக மூடப்பட்டது. கொவிட்-19 சார்ந்த தனிமைப்படுத்தல் நிலையமொன்றை நிறுவுவதற்காக நிறுவகத்தின் விடுதி வளவு இலங்கை தரைப்படைக்கும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கும் விடுவிக்கப்பட்டது. ஆகையால், விடுதி வளவுகள் நிறுவகத்தின் மாணவர்களுக்கும் பணியாட்குழுவினருக்கும் மூடப்பட்டன. அதுமுதற்கொண்டு நிகழ்நிலை (முடெனெ) முறையூடாகவே

கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன. சுகாதார சட்டதிட்டங்களை சிறப்பாக பின்பற்றியொழுகியதைத் தொடர்ந்து 2020 யூலை 10 ஆம் திகதி நிறுவகம் பணியாட்குழுவினருக்கு பௌதிக ரீதியாக திறக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட கொவிட்-19 சட்டதிட்டங்களை அனுசரித்து செப்டம்பர் மாதத்தில் மூன்றாம் அரையாண்டுப் பருவ மாணவர்களுக்காக நிறுவகம் மீண்டும் திறக்கப்பட்டது. கொவிட்-19 சட்டதிட்டங்களை அனுசரித்து அக்டோபர் 05 ஆம் திகதி புதிய மாணவர்களுக்கு நோக்குநிலை நிகழ்ச்சித்திட்டம் (ழுசனைவெயவழைஎ ீசழபசயஅஅந) வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

அக்டோபர் 4 ஆம் திகதி முதல் கொவிட்-19 இரண்டாம் அலை பரவலுடன் நாடு மீண்டும் சவாலான நிலையை எதிர்நோக்கியபோதும், அவ்வனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும் சளைக்காமல் பின்வரும் செயற்பணிகள் 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

- கொவிட்-19 தொற்றுநிலைமையுடன் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல்.
- முறையான ஒரு கட்டுப்பாட்டைப் பேணுவதுடன் மாணவர்கள் மத்தியில் சிறந்த உளப்பாங்குகளைக் கட்டியெழுப்புவதற்கு செயலாற்றுதல்.
- மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தர உறுதிப்படுத்தல்.
- உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
- நிதி உறுதிப்பாடும் வருமான உருவாக்குகையும்.
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியை மீள்கட்டமைத்தலும் டிப்ளோமாதாரிகளுக்கு தொழில்வாய்ப்புகளை விருத்திசெய்தலும்.

2021 சனவரி முதல் மேற்கொண்டு நிறுவகத்திற்கு மாணவர்களை அணிகளாக அழைப்பதற்கு அவசியமான சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிநெறிகளை மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் அவசரவேளை முகாமைத்துவப் பிரிவு (ஐவுருஆ-நுஆரு) தயாரித்தது. 2020 டிசம்பர் மாத இறுதியில் இப்பணிக்கு சுகாதார அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அனுமதி கிடைத்தது.

# உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| | தொலைநோக்கு<br>பணிக்கூற்று | ை |
| 1. | தகுதிவாய்ந்த அதிகாரியின் மீளாய்வு | 2 |
| 2. | நிறுவகத்தின் இலக்குகள் | 10 |
| 3. | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியின் சுருக்க வரலாறும் மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் தாபிப்பும் | 11 |
| 4. | நிறுவகத்தின் அலுவலர்கள் | 15 |
| 5. | முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் | 16 |
| 6. | தொடர்புகொள்வதற்கான தகவல்கள் | 17 |
| 7. | பணியாட்குழுவும் மாணவர்களும் பற்றிய விபரங்கள் | 18 |
| | 7.1 உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 19 |
| | 7.2 கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழு பற்றிய விபரங்கள் | 20 |
| 8. | ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | 21 |
| 9. | நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் | 25 |
| 10. | மாணவர்களின் செயற்பாடுகள் | 29 |
| 11. | 2020 ஆம் ஆண்டில்... | 31 |
| 12. | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி - 2020 | 34 |
| 13. | மீண்டெழும் செலவினம் பற்றிய விபரங்கள் | 35 |
| 14. | மூலதனச் செலவினம் பற்றிய விபரங்கள் | 35 |
| 15. | நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவினம்) | 35 |
| 16. | நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (வருவிக்கப்பட்ட வருமானம்) | 36 |
| 17. | நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு - 2020 | 36 |
| 18. | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துதல் பற்றிய அறிக்கை | 37 |
| 19. | ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் - 2020 | 46 |
| 20. | தேசிய கணக்காய்வு அலுவலகம் | 52 |
| 21. | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கானபதில் | 57 |

## மீள்நிறுவுகைக்குப் பிந்திய 2020 டிசம்பர் வரையான மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் முன்னேற்றம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக மீள்நிறுவுகை மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ், 10.2 பில்லியன் ரூபா செலவில் தொழில்நுட்ப நிறுவகம் (ஐவருஆ) 2017 மே மாதத்தில் ஹோமாகம, தியகம பகுதியில் எழில்மிகு ஒரு சூழலில் அனைத்து வசதிகளும் கொண்டதாக மீள்நிறுவப்பட்டதுடன், கற்கைநெறிகளின் பரப்பை விரிவுபடுத்துவதுடன் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது இதன் நோக்கமாக இருந்தது. 2020 டிசம்பர் மாதம் வரை நிறுவகம் எய்திய முன்னேற்றம் பற்றிய விபரம் கீழ் விபரிக்கப்படுகிறது:

### 1. மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்

தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (ஐவருஆ) சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, அது ஆரம்பிக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டு முதல் 17 ஆண்டுகளாக 350 மாணவர்கள் என்ற எண்ணிக்கையுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இருப்பினும் மீள்கட்டமைப்பாக்கத்தைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 480 வரை அதிகரிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டளவில் நிறுவகத்தில் 800 மாணவர்கள் பதிவுசெய்துகொண்டதன் அடிப்படையில் **100மூ ஐத் தாண்டிய** துரித வளர்ச்சி ஏற்பட்டது.

| பாடத்துறை | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| இரசாயன | 31 | 50 | 50 |
| சிவில் | 121 | 200 | 200 |
| மின் | 60 | 100 | 100 |
| இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு | 60 | 100 | 100 |
| பொறிமுறை | 80 | 100 | 100 |
| கடல்சார் | 20 | 20 | 20 |
| கப்பற்றுறை | 20 | 20 | 20 |
| பொலிமர் (பல்படி) | 30 | 46 | 50 |
| நெசவு மற்றும் புடவை | 60 | 64 | 60 |
| தகவல் தொழில்நுட்பம் | - | 100 | 100 |
| **மொத்தம்** | **482** | **800** | **800** |

## 2. அரையாண்டுப் பருவ முறை

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் ஹோமாகம, தியகமவில் மீள்நிறுவப்பட முன்னர், தொழில்நுட்ப நிறுவகத்தினால் ஆண்டுதோறும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா வழங்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விசார் பணியாட்குழு மேற்கொண்ட பரந்ததோர் ஆய்வினைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை அரையாண்டு பருவ அடிப்படையில் நடாத்தத் திட்டமிடப்பட்டது. அதன் அடிப்படையில், மூன்றாண்டு தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 6 அரையாண்டுப் பருவ நிகழ்ச்சித்திட்டமொன்றாக அதாவது, 4 அரையாண்டுப் பருவங்களைக்கொண்ட கற்கை நிகழ்ச்சித்திட்டமொன்றாகவும் 2 அரையாண்டுப் பருவங்களைக்கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றாகமாகவும் மாற்றமடைந்தது.

## 3. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகுதிச் சான்றிதழ்கள்

ஒவ்வோர் அரையாண்டு பருவமும் 25 கற்கைத் தகுதிச்சான்றிதழ்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பயிற்சி அரையாண்டு பருவமும் 06 கற்கைத் தகுதிச் சான்றிதழ்களைக் கொண்டிருக்கும். அந்த அடிப்படையில், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான மொத்த கற்கைத் தகுதிச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 112 ஆகும்.

## 4. நிதியும் நிருவாகமும்

2017 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பதவியணிக்குரிய பதவிகளை உள்ளக இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், வெளிவாரி விண்ணப்பம் கோரல்கள் ஆகியவற்றின் ஊடாக ஆட்சேர்ப்புசெய்வதன் மூலம் பூர்த்திசெய்ய நிறுவகம் இயலுமை பெற்றது.

நிறுவகத்தின் கற்கைப் பிரிவுகளாவன:

பொலிமர் (பல்படி) மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்

பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பம்

கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்

நெசவு மற்றும் புடவைத் தொழில்நுட்பம்
சிவில் பொறியியல் தொழில்நுட்பம்
இடைநிலைக் கற்கைகள்
மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பம்

இணைப்பு அலுவலரொருவரின் தலைமையில் இடைநிலைக் கற்கைத் துறைகளின்கீழ் ஆங்கிலமொழி கற்பித்தல் அலகொன்றை (நுடுவுரு) நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. தகுதிவாய்ந்த அதிகாரி, 2020 ஆம் ஆண்டில் அநேகமான சிரமங்களை தவிர்த்துக்கொண்டு முகாமைத்துவ சபைக்கு மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் வெற்றிகளைப் பதிவுசெய்வதற்கு முற்பட்டார்.

## 5. கல்வி, நிருவாக மற்றும் கல்விசாரா பணியாட்குழு

- கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள், நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக 2020 சனவரி மாதம் 1 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.
- பேராசிரியர் எஸ்.எம்.ஏ.நாணாயக்கார அவர்கள், நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக 2020 யூலை மாதம் 2 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டார்.
- கலாநிதி சி. சுஜீவ லெவன்கமகே, 2020 அக்டோபர் மாதம் 2 ஆந் திகதி முதல் நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

| பதவியணியினர் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | தற்போதைய பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| முதனிலை | 83 | 65 | 18 |
| இரண்டாம்நிலை | 81 | 53 | 28 |
| மூன்றாம்நிலை | 56 | 41 | 15 |
| சிரேட்ட | 85 | 59 | 26 |
| **மொத்தம்** | **305** | **218** | **87** |

## 6. தர உறுதிப்படுத்தல் அலகு

அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுடன் இணங்கிய உள்ளக தர உறுதிப்படுத்தல் முறைமையொன்றிற்கான தேவை நிறுவகத்தில் நீண்டகாலமாக நிலவியது. இந்நோக்கத்தை அடைந்துகொள்ளுமுகமாக தர உறுதிப்படுத்தல், தொடர்ச்சியான அபிவிருத்தி மற்றும் வினைத்திறனான செயலாற்றுகை ஆகிய விடயங்களை உறுதிப்படுத்தும் நோக்குடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டிநெறிகளின்படி இணைப்பூட்டல் அலுவலரொருவரின் தலைமையில் தர

உறுதிப்படுத்தல் அலகொன்று நிறுவப்பட்டது. அதன் அடிப்படையில், அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் கற்பித்தல் நடைமுறைகளும் தர மாதிரிகளின் அடிப்படையில் ஒழுங்கமைத்து பயன்படுத்தப்படுகின்றன.

## 7. நிறுவகத்தினுள் மாணவர்களுக்கு விடுதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்

அனைத்து மாணவர்களுக்கும் விடுதி வசதிகளை வழங்குவது நிறுவகத்தின் கொள்கையாகும். அதன் காரணமாக இரண்டாம் ஆண்டு 480 மாணவர்களுக்கும் முதலாமாண்டு 800 மாணவர்களுக்கும் விடுதி வசதி வழங்கப்பட்டது. மாணவர்களில் அனைவரும் போல் வளவினுள் விடுதிகளில் தங்கியிருக்கின்றனர். மாணவர்களின் உடல் மற்றும் உள நலனை விருத்திசெய்யும் நோக்குடன் அனுபவம் வாய்ந்த உடற்கல்வி ஆலோசகர்கள் இருவரின் வழிகாட்டலின் கீழ் முழுமையான தேகப்பியாச சாலையொன்றும் உள்ளக மற்றும் திறந்தவெளி விளையாட்டு வசதிகளும் கீழ்நிலை பதவியினரின் உதவியுடன் மாணவர்களுக்கு விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் சார்பாக பெயரளவிலான விலைக்கு உணவு வழங்குவதற்கு நிறுவகத்தின் நிவாரண உதவிகளைப் பெறும் இரண்டு உணவுச்சாலைகள் இயங்குகின்றன. அலுவலக நேரத்தில் தகுதிவாய்ந்த மருத்துவ பணியாட்குழுவொன்றின் கீழ் மருத்துவ நிலையமொன்று இயங்குவதுடன், இராக் காலத்தில் சேவையின் தேவையின் அடிப்படையில் போக்குவரத்துச் சேவையொன்று அமுலிலுள்ளது.

## 8. தொழில்நுட்ப நிறுவக (ஜவுருஆ) பணியாட்குழுவுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்

பணியாட்குழுவுக்கு தேவையின் அடிப்படையில் குடிமனைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, பெரும்பாலான கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழு உறுப்பினர்களுக்கு விடுதிகளில் எஞ்சிய அறைகளில் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பணியாட்குழுக்களுக்கு உணவுச்சாலையொன்றையும் பகல்நேர பராமரிப்பு மையமொன்றையும் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் வழங்க நிறுவனம் இயலுமை பெற்றுள்ளது. ஹோமாகம இலங்கை வங்கிக் கிளையொன்றை தொழில்நுட்ப நிறுவக வர்த்தக கட்டிடத்தொகுதியில் நிறுவி மாணவர்களுக்கும் பணியாட்குழுவுக்கும் வங்கி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

காகில்ஸ் ∴புட் சிற்றி கிளையொன்றை அவ்வர்த்தக கட்டிடத்தொகுதியில் நிறுவி விடுதிகளில் தங்கியிருக்கும் பணியாட்குழுவினதும் மாணவர்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

9. **ஏனைய உயர்கல்வி நிறுவகங்களுக்கான கல்விச் சேவை ஒதுக்கீடுகள் - 2020**

| நிறுவகம் | கல்விச் சேவைகள் | பெறுமானம் (ரூ.) |
|---|---|---|
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | தொழில்நுட்ப பீடத்தில் பட்டப் பயில்நிலையினருக்கான மண் மற்றும் தரை வேலைகளில் (ளுழடை ரூ நுயசவா றழசனள) பிரயோக ரீதியான பயிற்சி | 397,000.00 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | தொழில்நுட்ப பீடத்தின் பட்டப் பயில்நிலையினருக்கான பாய்ம இயக்கவியலில் (குடரனை ஆயஉாயஎைஉள) பிரயோகப் பயிற்சி | 1,581,500.00 |

## எதிர்காலத் திட்டங்கள்

புதிய கட்டிடத்தொகுதியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதை ஆண்டொன்றுக்கு 1,000 வரை அதிகரிப்பதற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் திட்டமிட்டுள்ளது. அதன் காரணமாக இவ்விலக்கை எய்துவதற்காக ஆட்சேர்ப்புகள் படிமுறையாக அதிகரிக்கப்படும்.

கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நிகழ்நிலை (ழடெனெ) முறையில் வழங்குவதற்கு அவசியமான வழிகாட்டல்கள் தர உறுதிப்படுத்தல் அலகினால் விருத்தி செய்யப்பட்டுள்ளது. தமது தேசிய பணிகளை சமூக, கைத்தொழில் தேவைகளுடன் கரங்கோத்துக்கொண்டு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி நிறைவேற்றுவதற்கு கற்கைத் துறைகள் திட்டங்களைத் தயாரித்து வருகின்றன.

## தொழில்நுட்ப நிறுவக வசதிகள்

வருமான உருவாக்குகை நோக்குடன் பல்நோக்கு மண்டபம், கேட்போர்கூடம், பணியாட்குழு அபிவிருத்தி நிலையம், வழித்தங்கல் விடுதிகள், கடைத்தொகுதி என்பன வர்த்தக விளம்பரங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன.

சூரிய சக்தித் தொகுதியொன்றை நிறுவுவதற்கும் மின்சார சிட்டைகளை செலுத்துவதற்கும் நிதிகளை உருவாக்குவதற்குமான ஆற்றல் குறித்து ஆராய்வதற்கு சாத்தியவள ஆய்வொன்று முடுக்கிவிடப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்ப நிறுவகத்தின் கடைத் தொகுதியிலுள்ள அனைத்துக் கடைகளையும் பொது வசதிகளையும் பொது மக்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## *02. நிறுவகத்தின் இலக்குகள்*

**இலக்குஇ 01**

சமூகத் தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய, பெரிதும் மாணவர் சமூகத்தை நெகிழ்வுப் பாங்குடன் நெருங்கக் கூடிய கற்பித்தல் மற்றும் திறன்களைப் பயிற்றுவிக்கும் முறைமையொன்றை உருவாக்குதல்

பிரயோக ரீதியாக உகந்ததான ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதலும் புத்தாக்கம் மற்றும் படைப்புத் திறனின்பால் ஆர்வமூட்டுதலும்.

**இலக்கு 02**

**இலக்கு 03**

பரஸ்பர அடிப்படையில் அனுகூலமான, பலம்பொருந்திய பங்காண்மையொன்றைக் கட்டியெழுப்புதலும் கைத்தொழில்களில் ஈடுபடுதலும்.

தகைமையும் ஊக்கமும் உள்ள பணியாட்குழுவொன்றை உருவாக்குதல்.

**இலக்கு 04**

**இலக்கு 05**

மாணவர்களின் முழுமையான அபிவிருத்தியை ஊக்கப்படுத்தும் ஒரு சூழலை உருவாக்குதல்.

நிறுவகத்தின் அனைத்துத் துறைகளதும் தரத்தையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துகின்றவாறான முகாமைத்துவ முறைமையொன்றை விருத்திசெய்தல்.

**இலக்கு 06**

**இலக்கு 07**

நிறுவனத்தின் நிதி உறுதிப்பாட்டை முன்னேற்றுதல;.

உட்கட்டமைப்பு வசதிகளை உச்சளவில் பயன்படுத்துவதன் மூலமும் முறையாக பராமரிப்பதன் மூலமும் அவற்றின் வினைத்திறனையும் பேண்தகு பயன்பாட்டையும் அதிகரித்தல்.

**இலக்கு 08**

## 03. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியின் சுருக்க வரலாறும் மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் தாபிப்பும்

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியின் தோற்ற வரலாறு, அத்துடன் வழங்கப்பட்ட இரண்டாண்டு கால கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் (துவுழு) கற்கைநெறியும் இலண்டன் பல்கலைக்கழக பொறியியல் பட்டத்திற்கு (டீளுஉ நுபெநெநசபெ னுநபசநந) மாணவர்களைத் தயார்படுத்தி வழங்கப்பட்ட நான்காண்டு கால தொழில்நுட்ப டிப்ளோமா காரணமாக மருதானை கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரி வரை நீண்டு செல்கிறது. கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் கற்கைநெறி மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்ற நடுத்தர மட்ட தொழில்நுட்பக் கற்கைநெறியொன்றாக விளங்கியதுடன், அதனைப் பூர்த்திசெய்தவர்கள் நாட்டின் பொறியியல் துறையின் முன்னேற்றத்திற்கு பாரியளவில் பங்களிப்புச் செய்தனர்.

1960 ஆம் ஆண்டில் மொறட்டுவை, கட்டுபெத்த பிரயோக தொழில்நுட்ப நிறுவகம் (ஐளெவவைரவந ழக ீசயஉவஉையட வுநஉாழெடழபல - ஜீவு) நிறுவப்பட்டவுடன் கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் கற்கைநெறி மருதானையிலிருந்து மொறட்டுவைக்கு மாற்றப்பட்டது. பிரயோக பாவனையை நோக்காகக் கொண்ட நடுத்தர மட்ட பொறியியல் தொழில்நுட்பக் கற்கைநெறிகளை விருத்திசெய்வதற்கும் அமுல்படுத்துவதற்கும் கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் பிரயோக தொழில்நுட்ப நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரயோக தொழில்நுட்ப நிறுவகம் (ஜீவு) 1966 ஆம் ஆண்டில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதுடன் அங்கு துரித கற்கைநெறி பல்வகைப்படுத்தலொன்று இடம்பெற்றது. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் ஐந்தாண்டு தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதுடன், கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் கற்கைநெறிக்கு வருடமொன்றில் தொழிற்சாலைகளில் பயிற்சியொன்று அறிமுகம்செய்யப்பட்டு அது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவுக்கு (னுவுவு) தகுதிபெறும் மூன்றாண்டு கால கற்கைநெறியொன்றாக மாற்றப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமொன்றாக தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மொறட்டுவைப் பல்கலைக்கழகமாக படிப்படியாக முன்னேற்றமடைந்தது. அதனைத் தொடர்ந்து தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா உயர்கல்வி அமைச்சுக்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 29(உ) பிரிவின் கீழ் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கற்கைநெறியொன்றாக மாறியது. அதில் சேர்வதற்கான கல்வித் தகைமையாக க.பொ.த. உயர்தரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடிப்படையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவையும் அதற்கு நிகரான மட்ட கற்கைநெறிகளையும் தொடர்வதற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள ஒரு நிறுவகமாக மொறட்டுவைப்

பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் (ஐவருஆ) 2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் முகாமைத்துவ சபையொன்றின் கீழ் இயங்குவதுடன், கற்கைநெறிகளை சுயாதீனமாக விருத்திசெய்வதற்கு நிறுவகத்தை தனிவேறாக நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (னுவுவு) கற்கைநெறி பற்றிய ஒரு சுருக்க அறிமுகம்

எமது நாட்டின் கைத்தொழில்களுக்கு பல்வேறு துறைகளிலிருந்து அவசியப்படும் பொறியியல் டிப்ளோமாதாரிகளை உருவாக்குவது குறிக்கோளாகும். நிறுவகத்தினால் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் பத்து(10) பாடங்களைக் கொண்டதாக முன்னெடுக்கப்படுவதுடன், அதற்கு மொத்தம் 800 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். நிறுவகத்தினால் வழங்கப்படும் கற்கைநெறிகள் பற்றிய விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம் | - | 50 |
| சிவில் பொறியியல் தொழில்நுட்பம் | - | 200 |
| மின் பொறியியல் தொழில்நுட்பம் | - | 100 |
| மின் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்பம் | - | 100 |
| கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் | - | 20 |
| பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பம் | - | 100 |
| கப்பற்றுறை கற்கைகள் | - | 20 |
| பொலிமர் (பல்படி) தொழில்நுட்பம் | - | 50 |
| புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம் | - | 60 |
| தகவல் தொழில்நுட்பம் | - | 100 |

இது தவிர, சேர்த்துக்கொள்ளும்போது முப்படையினருக்கும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாட்குழுவுக்கும் உயர்ந்தபட்சம் 5 பேர்கள் வரை இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியில் சேர்த்துக்கொள்ளல் முறையான ஒரு செயன்முறை ஊடாக இடம்பெறுகிறது. அடுத்தடுத்த மூன்று ஆண்டுகள் வரை உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றி ஓராண்டில் பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். ணு-புள்ளிகளை அடிப்படையாகக்கொண்டு தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் பின்பு தகுதிகாண் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

முழுநிறைவான டிப்ளோமாதாரியொருவரை துறையில் தொழில்வாண்மை பொறியியலாளரொருவர் அல்லது முகாமையாளரொருவர் மற்றும் உழைப்புச் சேனையினிடை

இடைப்பட்ட இணைப்பாளரொருவராக செயலாற்றுவது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகிபாகத்திற்கு டிப்ளோமாதாரியொருவரை தொழில்வாண்மை ரீதியில் விருத்திசெய்தலும் அவரது தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவத் திறன்களை முன்னேற்றுவதும் அவசியமாகும். அவர் தெரிவுசெய்த கற்கைத் துறையில் கல்வி கற்க வேண்டுமென்பதுடன், அதன் மூலம் அவருக்கு தொழில்வாண்மை பொறியியலாளரொருவரின் புத்தாக்க.்படைப்பாக்கங்களை மதிப்பிடக் கூடியதாக இருக்கும். தனக்குக் கீழுள்ள அலுவலர்களுடன் தொடர்பாடல் செய்து அத்தகைய புத்தாக்கங்களை.்படைப்புகளை யதார்த்தமாக மாற்றக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் கற்கைநெறி இரண்டாண்டுகளைக் கொண்ட கற்கை காலமொன்றையும் 6 அரையாண்டு பருவங்களைக்கொண்ட ஓராண்டு கைத்தொழில் பயிற்சியொன்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். அடிப்படை விஞ்ஞானங்களில் மாணவர்களின் அறிவை சமப்படுத்தல், ஒருங்கிணைத்தல், முன்னேற்றுதல், அவரால் தெரிவுசெய்யப்பட்ட விசேட கற்கைப் பரப்பை அறிமுகப்படுத்தல் என்பதற்காக முதலாம், இரண்டாம் அரையாண்டு கற்கைப் பருவத்தில் பாடக்கூறுகள் பிரதானமாக உருவாக்கப்பட்டுள்ளது. பொறியியல் பயிற்சிக்கு அவசியமான அடிப்படைத் திறன்கள் சிலவற்றுக்கும் இங்கு மாணவர்கள் உட்படுத்தப்படுவர். (உதாரணமாக: தொழிற்சாலைத் தொழில்நுட்பமும் பொறியியல் வரைதலும்.)

பின்வருவன காரணமாக ஆங்கிலமொழி முதலாம், இரண்டாம் அரையாண்டுகளில் கட்டாயமான ஒரு பாடமாக விளங்கும்:

ை. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி ஆங்கிலமொழியில் நடைபெறும். கணிசமான மாணவர்கள் க.பொ.த. உயர்தரம் வரை தமது கல்வி நடவடிக்கைகளை சிங்களமொழி அல்லது தமிழ்மொழிமூலம் மேற்கொண்டிப்பதன் காரணமாக ஆங்கிலமொழி மொடியூல்கள் தொடர்பாடல் தேர்ச்சிகளை வளர்ப்பதை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

ை. தொடர்பாடல், டிப்ளோமாதாரியின் தொழில்வாண்மை நடத்தையில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கும். ஆதலால், ஆங்கிலமொழியில் கிரகித்தல், பேச்சாற்றல், அறிக்கைகளை எழுதுதல் பற்றிய தமது திறன்களை மாணவர்கள் விருத்திசெய்துகொள்ள வேண்டும்.

மூன்றாம், நான்காம் அரையாண்டு பருவங்களில் பாடக்கூறுகள் மாணவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட பாடத்துறையில் பொறியியல் தோற்றப்பாடுகளின் பிரயோகங்கள் பிரதானமாக அடங்கும்.

ஐந்தாம், ஆறாம் ஆறு மாத காலங்கள் குறித்த கைத்தொழிலில் பிரயோக ரீதியான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒதுக்கப்படும். தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (யூஐவுயு)இ தொழில்நுட்ப நிறுவகத்தின் (ஐவுருஆ)

பயிற்சிப் பொறியியலாளருடன் இணைந்து பயிற்சிக்கான நிறுவனங்களை ஏற்பாடுசெய்து வழங்கும்.


பல்கலைக்கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை முறைமைகளுக்கமைய மூன்றாண்டு கால கல்வி மற்றும் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்த மாணவர்களுக்கு தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் சாதாரண, திறமை அல்லது அதிதிறமை சித்திகளுடன் வழங்கப்படும்.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாதாரிகள் தகுதிகளைப் பூர்த்திசெய்து ஓராண்டினுள் அவர்களின் தொழில் ஈடுபாடு 100மூ ஆகவுள்ளதென்பது தொடராய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தில் காணப்படும் கற்கைக் கலைத்திட்டம் 2005 ஆம் ஆண்டின் முதலாமாண்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 2006 ஆம் ஆண்டில் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. கைத்தொழில் உலகின் இன்றைய முன்னேறிய தொழில்நுட்ப முறைகளை அதனோடு சமமாக பேணி தெரிவுசெய்யப்பட்ட கற்கைத் துறைகளில் மாணவர்களின் அறிவை விருத்திசெய்தல் இதன் நோக்கமாகும்.

நீண்டகாலத்திற்குப் பிறகு தொழில்நுட்ப நிறுவகத்தின் (ஐவுருஆ) மீள்நிறுவல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கலைத்திட்டம் விருத்திசெய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. கற்கைச் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அடிப்படையில் ஆறு மாத அடிப்படையில் மாற்றப்பட்டது.

## 04. நிறுவக இணைப்பாக்கம் - 2020 மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் (ஐவருஆ)



# 05. முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | கலாநிதி சி.எஸ்.லெவன்கமகே | தகுதிவாய்ந்த அதிகாரி |
| 2. | திரு. எஸ்.எச்.எல். கமகே | உயர்கல்வி விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் பெயர்குறித்த நியமத்தர் |
| 3. | திரு. ஏ.டப்ளியு.செனெவிரத்ன | கப்பற்றுறை விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் பெயர்குறித்த நியமத்தர். |
| 4. | திருமதி ஆர்.எம்.ஏ.பீ.சமரதிவாகர | தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் பெயர்குறித்த நியமத்தர். |
| 5. | பேராசிரியர் என்.கே.விக்ரமாரச்சி | பீடாதிபதி, பொறியியல் பீடம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| 6. | திரு. டி.பீ.சந்திரசேக்கர | பீடாதிபதி, கட்டிடக்கலை பீடம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| 7. | பேராசிரியர் (திருமதி) கல்யாணி பெரேரா | சபையின் பெயர்குறித்த நியமத்தர். (2020.02.22 – 2023.02.21) |
| 8. | பேராசிரியர் ஏ.எஸ்.கருணானந்த | மூதவையின் பெயர்குறித்த நியமத்தர். (2020.07.22 முதல்) |
| 9. | திரு. ஜி.ஜி.ஜயரத்ன | கல்விச் சபை பெயர்குறித்த நியமத்தர் ஐவருஆ (2020.10.12 – 2023.10.11 வரை) |
| 10. | கலாநிதி (திருமதி) எம்.சி.டப்ளியு.சோமரத்ன | கல்விச் சபை பெயர்குறித்த நியமத்தர் ஐவருஆ (2020.11.10 – 2023.11.09 வரை) |
| 11. | கலாநிதி பிரியந்த பிரேமகுமார | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பெயர்குறித்த நியமத்தர்கள் (2020.01.16 – 2023.01.15 வரை) |
| 12. | கலாநிதி சரித் ஜயதிலக | |
| 13. | திருமதி என்.கே.அபேரத்ன டயஸ் | |

## 06. தொடர்புகொள்வதற்கான தகவல்கள்


முகவரி: தொழில்நுட்ப நிறுவகம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்,

தியகம,

ஹோமாகம,

இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள்:

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் | : | 011 2124001 |
| பொது | : | 011 2124000 |
| தொலைநகல் | : | 011 2117030 |
| மின்னஞ்சல் முகவரி | : | director@itum.mrt.ac.lk |

# 07. பணியாட்குழுவும் மாணவர்களும் பற்றிய விபரங்கள்

| கற்கைப் பிரிவுகள் | கற்கைநெறி | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த கல்விசார் பணியாட்குழு | | மொத்த கல்விசாரா பணியாட்குழு |
|---|---|---|---|---|---|
| **சிவில் பொறியியல் தொழில்நுட்பம்** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | | விரிவுரையாளர்கள்<br>ீ – 08<br>ஏ- 05 (யிசவ வஅைந)<br>ஊ- 01 | போதனாசிரியர்கள்:<br>வு – 7 ஏ - 7 | ீ- 07<br>ஊழவெசயஉவ - 01 |
| **பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பமும் கப்பற்றுறைக் கற்கையும்** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | 276 | விரிவுரையாளர்கள்<br>ீ – 07<br>ஊ- 02<br>ஏ- 05 | போதனாசிரியர்கள்:<br>வு - 08<br>ஏ – 25 | ீ- 29 |
| **கடல்சார் பொறியியல் பிரிவு** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | | விரிவுரையாளர்கள்<br>ீ – 01<br>ஏ – 00<br>ஊ- 01 | போதனாசிரியர்கள்:<br>வு – 00<br>னுயு டு-06<br>னுயு ஐ- 02 | ீ- 02<br>ஊ- 02 |
| **பல்படி மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | | விரிவுரையாளர்கள்<br>ீ – 08<br>ஏ – 03<br>ஊ - 00 | போதனாசிரியர்கள்:<br>வு – 06<br>ஏ – 03 | ீ- 10 |
| **புடவை மற்றும் நெசவுத் தொழில்நுட்பம்** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | | விரிவுரையாளர்கள்<br>ீ – 03<br>ஏ – 02 | போதனாசிரியர்கள்:<br>வு – 02<br>ஏ – 01 | ீ- 06<br>வு- 01 |
| **மின், இலத்திரனியல், தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்பம்** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | | விரிவுரையாளர்கள்<br>ீ – 08<br>ஏ – 02<br>வு – 01 | போதனாசிரியர்கள்:<br>வு – 11<br>ஏ – 09 | ீ- 10<br>வு- 04 |
| **இடைநிலைக் கற்கை** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | ளுநஅநளவ நச 1ரூ2 – 1600<br>ளுநஅநளவ நச 3 – 760<br>ளுநஅநளவ நச 4 – 760 | விரிவுரையாளர்கள்<br>ீ – 11<br>ஊ - 01<br>ஏ –12 | போதனாசிரியர்கள்:<br>வு – 01<br>ஏ – 09 | ீ – 03 |
| **தகவல் தொழில்நுட்பம்** | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | | விரிவுரையாளர்கள்<br>ீ – 06<br>ஏ – 06 | போதனாசிரியர்கள்:<br>வு – 03<br>ஏ –05 | ீ-01 |

ீ – நிரந்தர
ஊ – ஒப்பந்த
வு – தற்காலிக
ஏ – வருகைதரு
னுயு டு – தேசிய டிப்ளோமா சங்க விரிவுரையாளர்
னுயு ஐ – தேசிய டிப்ளோமா சங்க போதனாசிரியர்

## 7.1 உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

நிறுவனத்திற்கு 800 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் 10 துறைகளைக் கொண்டிருக்கும். அதாவது இரசாயன, நெசவுக் கைத்தொழில், பொலிமர், சிவில், மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு, கடல்சார், பொறிமுறை, கப்பற்றுறை ஆகியனவாகும்.

| கற்கைப் பிரிவு | கற்கை நெறி | மொழி மூலம் | மாணவர்களை சேர்த்துக் கொள்ளல் 2020 | இரண்டாம் அரை மாத பருவ மாணவர்கள் | நான்காம் அரை மாத பருவ மாணவர்கள் | கைத்தொழில் பயிற்சி மாணவர்கள் | மொத்த டிப்ளோமா தாரி மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| சிவில் பொறியியல் தொழில்நுட்பம் | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | -- | 200 | 197 | 118 | 77 |
| பொறிமுறைப் பொறியியல் மற்றும் கப்பற்றுறை கற்கை | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 100 | 101 | 99 | 76 | 52 |
| கடல்சார் கற்கைப் பிரிவு | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 40 | 40 | 40 | 37 | 21 |
| பல்படி (பொலிமர்) மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம் | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 100 | 100 | 89 | 57 | 40 |
| புடவை மற்றும் நெசவுத் தொழில்நுட்பம் | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 60 | 60 | 61 | 58 | 52 |
| மின், இலத்திரனியல், தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்பம் | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 200 | 200 | 200 | 120 | 74 |
| இடைநிலைக் கற்கை | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 800 | 800 | 160 | | |
| தகவல் தொழில்நுட்பம் | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | ஆங்கிலம் | 100 | | 98 | | |
| மொத்தம் | | | 1400 | 1501 | 944 | 466 | 316 |

## 7.2 கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழு பற்றிய விபரங்கள்

| பணியாட்குழு வகையீடு | சம்பளத் திட்டம் | அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை | தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை | பதவி வெற்றிடம் |
|---|---|---|---|---|
| கல்விசார் பணியாட்குழு | ரு-யுஉள 3 வழ ரு-யுஉள 5 | 76 | 52 | 24 |
| | ரு-யுஉள 1 வழ ரு-யுஉள 2 | 46 | 38 | 08 |
| சிரேட்ட பணியாட்குழு | ரு-நுஒ 1 வழ ரு-நுஒ 3 (யுனஅளைவசயவளைந ரூ குயெஎயைட ளுவயகக) | 07 | 07 | - |
| | ரு-நுஒ 1 வழ ரு-நுஒ 3 (ழுவாநச நுஒநஉரவளைந ளுவயகக) | 01 | - | 01 |
| மருத்துவ அலுவலர் | ரு-ஆழ 1 | 01 | - | 01 |
| கற்கை உதவியாளர் பணியாட்குழு | ரு-யுளு 1 | 07 | 02 | 05 |
| | ரு-யுளு 2இ2 | 03 | 01 | 02 |
| தொழில்நுட்ப பணியாட்குழு | ரு- ஆவு 1 | 38 | 18 | 20 |
| எழுதுநர்கள் மற்றும் சமாந்தரமானவர்கள் | ரு-ஆே 1 | 37 | 31 | 06 |
| | ரு-ஆே 2இ3 | 05 | 03 | 02 |
| | ரு-ஆே 4 | 01 | 01 | - |
| ஆரம்ப பணியாட்குழு | ரூடு 1 வழ ரூடு 3 | 83 | 65 | 18 |
| மொத்தம் | | 305 | 218 | 87 |

## 08. ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் பணியாட்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் காண்புகள், உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் சமர்ப்பிக்கப்பட்டு.ஃ பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

| ஆசிரியர் | பத்திரத்தின் தலைப்பு | கருத்தரங்கு.ஃ பருவ வெளியீடு.ஃநூல்கள் .ஃ ஈடுபட்ட தினம் |
|---|---|---|
| வீரசிங்க கே.ஏ.பி., கமகே ஜே.சி.பீ.எச்., பௌசியா எஸ்., தம்பிரத்னம் டீ.பீ. | நுஒிநசஅநவெயட ஐஎெநளவகையவழைெ ழெ குடநஒரசயட டீநாயஎழைரச ழக ஏநசவஅை உயடடல-ஊரசஎநன ஊளசை உரடயச-ர்ழடடழற ளுவநநட ளுநஉவழைளெ ளுவசநபெவாநநென றவொ நுஒவநசயெடடல டீழனெநன ஊயசடிழெ குடிைசந சுநகைெழசஉநன ீழடலஅநசஇ நுபெநைெநசபை ளுவசரஉவரசநள. | 2020 |
| வீரசிங்க கே.ஏ.பி., கமகே ஜே.சி.பீ.எச்., தம்பிரத்னம் டீ.பீ., பௌசியா எஸ். | ரேஅநசஅை யட ஐஎெநளவகையவழைெ ழெ குடநஒரசயட டீநாயஎழைரச ழக ஏநசவஅை உயடடல-ஊரசஎநன ஊளசை உரடயச-ர்ழடடழற ளுவநநட ளுநஉவழைளெ ளுவசநபெவாநநென றவொ நுஒவநசயெடடல டீழனெநன ஊயசடிழெ குடிைசந சுநகைெழசஉநன ீழடலஅநசஇ நுபெநைெநசபை ளுவசரஉவரசநள | 2020 |
| வீரசிங்க கே.ஏ.பி., சஜிந்தன் ஆர்., கமகே ஜே.சி.பீ.எச். | நுஒிநசஅநவெயட ஐஎெநளவகையவழைெ ழெ வுழசளழைெயெட டீநாயஎழைரச ழக ஊயசடிழெ குடிைசந சுநகைெழசஉநன ீழடலஅநச ளுவசநபெவாநநென ஊளழஎெசநவந டீநயஅள ஊரசஎநன ை ர்ழசணைழவெயட ீடயநெஇ வுாந யுரெயட ளுநளளளழைளெஇ ளுவசரஉவரசயட நுபெநைெநசள ளுழஉநைவலஇ ளுசை டுயமெய. | 2020 |
| கனன்கொட ஆரச்சி வி.என்., பத்ரானி தோரதெனிய | ஐஅியஉவ ழக வாந ஊடநைவெ“ள சழடந ழெ வாந ிநசகழசஅயஎந ழக புழஎநசஅநவெ குரனெநன ஊளழளெவசரஉவழைெ ீசழதநஉவள. | இலங்கை பொறியியல் நிறுவகம் - 114 ஆம் வருடாந்த அமர்வு |
| ஹேவாவசம் சி., அபேசிங்க யூ.எம்., சமரமாது டீ.டீ.ஜி.ஏ.டீ.எஸ். | யுளளநளளளைபெ கயஉவழசள யகநஉவளைபெ ரஎைநசளளவைல ளவரனநவெ’ ிசநகநசநஎந ழக றயடமளைப் உழஅியசளைபெ ருஎைநசளளவைல ழக ஆழசயவரறய ரூ ளுசை துயலநறயசனநநெிரசய. | 13 ஆவது .ஃபாரு சர்வதேச மாநாடு – மொறட்டுவைப் பல்கலைக்கழகம் - இலங்கை<br><br>2020 நவம்பர் 06-07 |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| ஆசிரியர் | பத்திரத்தின் தலைப்பு | கருத்தரங்கு.: பருவ வெளியீடு.: நூல்கள் .: ஈடுபட்ட தினம் |
|---|---|---|
| குமாரசிறி எல்.பீ. | யு ளுவரனல ழக வாந ியசயடநடள ளை யஅைள யனெ நழிநஉவயஎைநள டிநவறநநநெ ளுயடியசயபயஅரறய யனெ ஏநனனாய னயஎைபெ வசயனவைழெ யனெ வாநசை சநடயவநன னயஎைநசள. | அருவ கலாசார மரபுரிமைகள் பற்றிய சர்வதேச மாநாடு – 2020 டிசம்பர் 18-19 |
| தசநாயக்க டீ.ஏ.டீ., பண்டார ஜே.ஏ.எஸ்.டி., பெரேரா எச்.பீ.என்., | யுெ யுயெடலளளை ழக வாந சுநடயவழைளொனி டிநவறநநநெ யுஒைநவல யனெ ஊழயஉாபெ டீநாயஎழைச ழக யேவழைஒயெட டுநஎநட ஊழவெயஉவ ளுிழசவள யனெ ழேெ - ஊழவெயஉவ ளுிழசவள ஆயடந யுவாடநவநள ளை ளுசை டுயமெய. | பலஒழுங்கு அணுகுமுறைகள் (ஆரடவனைளைஉனிடயைெசல யீிசழயஉாநள) பற்றிய சர்வதேச மாநாடு – 2020 டிசம்பர் 8-9 |
| திலூசினீ பீ.ஆர்., நவோதனீ டப்ளியு.ஆர்.என்., தரங்கிகா பம்பரவானகே, உதயகுமார் கே.ஏ.சி. | ளுழடை சுநளளைவவளைவைல யுயெடலளளை யனெ நுயசவா நுடநஉவசழனந சுநளளைவயஒெந னுநவநசஅயைெவழைெ | நுடநஉவசஅைஉயட யனெ நுடநஉவசழனைஉள நுபெநைெநசயைெ (ஐழுளுசு-துநுநுநு) ஐழுளுசு சஞ்சிகை ந-ஐளுளுே: 2278-1676இ ி-ஐளுளுே: 2320-3331இ ஏழடரஅந 15இ ஐளளரந 2 ளுநச. ஐ (ஆயச – யிச 2020)இ ° 26-35 றறற.ழைளசதழரசயெடள.ழசப |
| மஞ்சுள விக்ரமதிலக்க | ழேெ-ஐவெசரளளைந டழயன அழவைவழசயைெ: சுநஉநவெ னநளநடழிஅநவெள யனெ உாயடடநபெநள | கணினி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய சர்வதேச கருத்தரங்கு (ஐஉயுஉவு) – களனிப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தினால் இணையவழியில் ஒழுங்கு செய்யப்பட்டது. - 2020 நவம்பர் 28 |
| கலப்பத்தி கே., குருப்பு எஸ். | யு வநஒவ அளைபெ யீிசழயஉா வழ யயெடலணந வசநனெள ளை வாந ஐவு னைெரளவசல தழடி அயசமநவ வாசழரபா வநஒவ நஒவசயஉவழைெ கசழஅ அையபநள | கணினி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய சர்வதேச கருத்தரங்கு (ஐஉயுஉவு) – 2020 (இணைவழி) 2020 நவம்பர் 28 |
| ஜயரத்ன ஜீ.ஜீ, | ஐகெடரநஎெந வழ கரநட உழளெரஅிவழைெ றவைா யனஎயஎெநன வநஉாழெடழபல ளை அழனநசெ யரவழஅழடிடைந உழளெவசரஉவழைெ | தொழில்நுட்ப நிறுவக (ஐவுருஆ) ஆராய்ச்சிக் கருத்தரங்கு - 2019 |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| ஆசிரியர் | பத்திரத்தின் தலைப்பு | கருத்தரங்கு.∴ பருவ வெளியீடு.∴ நூல்கள் .∴ ஈடுபட்ட தினம் |
|---|---|---|
| குமார பீ.டி.சி. | ஐஅிடநஅநவெயவழைெ ழக ய றநசைநடநளள னளைவசஅைரவநன ழெனந-டியளநன ளலளவநஅ கழச அழவைெழசஅைபெஇ உழவெசழடடஅைபெ யனெ னயவய டழபபஅைபெ ழக ய ீயசயடிழடஅை வுசழரபா ஊளழஎநவெசயவழச | பிரயோக மற்றும் தூய விஞ்ஞானங்கள் பற்றிய சர்வதேச மாநாடு (ஐஊயீளு – 2020இ களனி) |
| அபேசேக்கர எம்.எஸ்., ஜயதுங்க ஜி.கே., திசாநாயக்க டி.எம்.கே.என்.எல்., அமரசிங்க பி.பம்.டப்ளியு.பீ.கே. | ளுவரனல ழெ குடரனைணையவழைெ டீநாயஎழைரச ழக சுயற யனெ னுசல ளுசல டுயமெயெ டீடயஉம ீநீநச | மொறட்டுவை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு - 2020 (ஆநுசுஊழெ)<br><br>6 ஆவது சர்வதேச பலஒழுங்கு அணுகுமுறை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு - 2020 யூலை 27-30 |
| மஹேஃ ஜயவீர, ஹரீனி பெரேரா, நிலந்தி பண்டார, கிம்ஹானி தனுகா, புத்திக குணவர்தன, சாந்தனீ சோமரத்ன, ஜகத் மனதுங்க | ஆபைசயவழைெ ழக ாிவாயடயவநள கசழஅ ீநுவு றயவநச டிழவவடந ைெ நளநவெள ழக சநிநயவநன ரளநள யனெ யளளழஉயைவநன சளைம யளளநளளஅநவெ | சூழலியல் மற்றும் சூழல் மாசடைதல் ஆராய்ச்சிகள் ஜளுளுடீ 0944-1344<br><br>நுஎெசைழெ ளுஉஅ ீழடடரவ சுநள னுழுஜ 10.1007.∴ள11356-020-09925-4 யுஉஉநிவநன: 29ஙா துரநெ 2020 |
| அமாலி தனுஃகா வீரகோன் | யுெ நுஒஉநடடநவெ குழசஅயவளைந யுளளநளளஅநவெ வழ நுஎயஎெந புசயனரயவந யுவவசஅைரவநள: யு ளுவரனல றவொ ீழடலஅநச வுநஉாழெடழபல ளுவரனநவெள | மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் (ஐவுருஆ)ீழுடுலுஆநுசு வுநுஊர் 20” சஞ்சிகை – 2020 மார்ச் 13 |
| அமாலி தனுஃகா வீரகோன், லலித் கருணாநாயக்க, கலாநிதி தில்ஹார எதிரிசிங்க | நுகநஉவள ழக ளுழடஎநவெ ளுலளவநஅ ழெ வாந ாிழடலிாநழெட நஒவசயஉவழைெ கசழஅ டீயயெயெ (ஆரளய ளீி. ஏயச. யுஅடிரட மநளநட) ீளநரனழ-ளவநஅ | கணினி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய இணையவழி சர்வதேச கருத்தரங்கு - ஜஊயுஊவு 2020 |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| ஆசிரியர் | பத்திரத்தின் தலைப்பு | கருத்தரங்கு.ஃ பருவ வெளியீடு.ஃ நூல்கள் ஃ ஈடுபட்ட தினம் |
|---|---|---|
| ராமசிங்க ஆர்.எல்.பீ., லியனகே என்.எம்.வி.கே. | ருளந ழக யுஉசலடஉை ீழடலஅநச அழனகைகநைன ர்லனசழிாழடிஉை யேழெ-ளுடஉையை சுநகெழசஉநஅநவெ ழக ஓடீசு யேழெ-ஊழஅிழளவைநள னுநளபைநென கழச புடழஎந ஆயரெகயஉவரசபைெ | மொறட்டுவை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு - 2020 (ஆநுசுஊழெ)<br><br>னுழுஜ: 10.1109.ஃ.ஆநுசுஊழெ50084.2020.9185353 |
| ராமசிங்க ஆர்.எல்.பீ. | ருளந ழக ருயெழெரஎநன ஞரணைணநள யவ டநஉவரசநள வழ நொயஎந யஉயனநஅஉை ிநசகழசஅயஎநஇ யடழபௌனைந உைஎசநயளநன டநஉவரசந யவவநனெயஎந உை ய ளநஉழனெ லநயச நுபெநைநசபைெ உழரசளந | இலங்கையில் உயர்கல்வி பற்றிய ளுடுயுஜர்நுநு கருத்தரங்கு - 2020 |
| திருமதி விக்ரமாரச்சி டப்ளியு.வி.டப்ளியு.எச்., பேராசிரியர் வல்பலகே எஸ்., கலாநிதி திருமதி எகொடகே எஸ்.எம். | நுககநஉவ ழக ியசவஉைரடயவந கடைடநசள ழஒ யெவரசயட சரடிடிநச.ஃாபொ-னநளெவைல ிழடலநவாலடநநெ டிடநனெள கழச சழழகஉபெ யீிடஉையவழைஒ | *ீழடலஅநசள யனெ ீழடலஅநச ஊழஅிழளவைநள”* எனும் சஞ்சிகை |
| பபசரா வி.ஜீ.பீ., பெரேரா எம்.வை.ஏ. | ருளந ழக ரயெழெரஎநன ஙரணைணநள யள ய கழசஅயவளைந யளளநளளஅநவெ வழழட வழ ைஅிசழஎந நபெநைநசபைெ வநஉாழெடழபலளவரனநவெ யவவயஅைஎநவெ | இலங்கையில் உயர்கல்வி பற்றிய கருத்தரங்கு – 16 ஆவது வருடாந்த ளுடுயுஜர்நுநு கருத்தரங்கு - யூலை 24 |

## 09. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| | நிகழ்ச்சித் திட்டங்கள்.˙. கருத்தரங்குகள்.˙. செயலமர்வுகள் | நடைபெற்ற தினங்கள் | கலந்துகொண்டோர் | பிற விடயங்கள் |
|---|---|---|---|---|
| பொலிமர் (பல்படி) மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் | கைநழுவிய உற்பத்திச் செயன்முறை அபிவிருத்தியும் உகப்புப்பாடும் (ஒருநாள் செயலமர்வு) | 2020 பெப்ரவரி 15 | கலந்துகொண்டோர் 25 | இது பிரிவின் சிறப்பான ஒரு குழுநிலை வேலையாகும். |
| தகவல் தொழில்நுட்பம் | 99ஓ தொழில்நுட்பம் மூலம் தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில்களை விழிப்பூட்டல் பற்றிய செயலமர்வு | 2020 பெப்ரவரி 21 | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா, தகவல் தொழில்நுட்ப மாணவர்கள் | செயலமர்வின்போது தலைப்புக்கள், தகவல் தொழில்நுட்பக் கைத்தொழிலில் பணியாற்றுதல், தற்போதுள்ள பல்வேறு தொழில்வாய்ப்புகள், பட்டப் பயில்நிலை மாணவர்களின் கைத்தொழில் அபிலாசைகள், விண்ணப்பங்களை எழுதுதல், இணையவழியில் தோன்றுதல், மற்றும் வினா விடை அமர்வுக்கான தலைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செயலமர்வின் இறுதியில் 99ஓ தொழில்நுட்பம் பற்றிய கைத்தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்த பயிற்சியாளர்கள் இருவரின் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் அமர்வொன்று இடம்பெற்றது. |

## நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| | நிகழ்ச்சித்திட்டங்கள்.˙. கருத்தரங்குகள்.˙. செயலமர்வுகள் | நடைபெற்ற தினங்கள் | கலந்துகொண்டோர் | பிற விடயங்கள் |
|---|---|---|---|---|
| புடவை மற்றும் ஆடையணிகள் தொழில்நுட்பம் | வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், போக்குகள் மற்றும் வாய்ப்புகள் | 2020 டிசம்பர் 23 | ளூகு மூலம் நடாத்தப்பட்டது. | |
| | மாணவர்களை குவிமையப்படுத்திய இணையவழி (நிகழ்நிலை) கற்கைநெறிகளின் திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு முறைகள் பற்றிய அமர்வு | 2020 நவம்பர் 18 இணையவழி (நிகழ்நிலை) | அனைவருக்கும் இணையவழி (நிகழ்நிலை) அமர்வு | மாணவர்களை குவிமையப்படுத்திய கற்றலுக்கான இணையவழி (நிகழ்நிலை) கற்கைநெறிகளும் திட்டமிடல்களும் மதிப்பீட்டு முறைகளும் பற்றிய அமர்வு |
| | புலமைச்சொத்து மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் | 2020 அக்டோபர் 24, 31 மற்றும் நவம்பர் 7 | இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (ஐநுளுடு) உறுப்பினர்கள், ஏனைய புத்தாக்குநர்கள் | புலமைச்சொத்து மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் |
| | உமது கற்பித்தலை எவ்வாறு முன்னேற்றலாம்? என்பது பற்றிய இணையவழி கலந்துரையாடல் | 2020 அக்டோபர் 15 | பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் | உமது கற்பித்தலை எவ்வாறு முன்னேற்றலாம்? என்பது பற்றிய இணையவழி கலந்துரையாடல் |
| | நவீன புடவை மற்றும் நெசவு மெய்நிகர் வர்த்தகக் கண்காட்சி | 2020 அக்டோபர் 15, 30 (மெய்நிகர்) | புடவை வர்த்தகப் பெயர்கள்.˙. கைத்தொழில்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் | |

## நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| | நிகழ்ச்சித்திட்டங்கள்.˙. கருத்தரங்குகள்.˙. செயலமர்வுகள் | நடைபெற்ற தினங்கள் | கலந்துகொண்டோர் | பிற விடயங்கள் |
|---|---|---|---|---|
| பணியாட்குழு அபிவிருத்திக் குழு | தமிழ்மொழி | 2020 பெப்ரவரி முதல் மார்ச் வரை | கல்வி நிருவாக பணியாட்குழு | |
| | மனித வாழ்வில் கலை நடவடிக்கைகள் | 26.09.2020 | கல்வி நிருவாக பணியாட்குழு | <u>வளவாளர்கள்:</u> கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, திருமதி கலனி தொடன்தென்ன, திருமதி லக்னி குமாரசிறி |
| | கலைத்திட்ட திருத்த செயலமர்வு | 05.12.2020 | கல்விசார் மாணவர் பிரதிநிதிகள் முதலான மாணவர் சங்க உறுப்பினர்கள் | |

## 10. மாணவர்களின் செயற்பாடுகள்



*தைப்பொங்கல் பண்டிகை – 2020*




- *மாணவர்களின் அழகியற் செயற்பாடுகள்*

# 11. 2020 ஆம் ஆண்டில்.....

**மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்வி நிருவாகக் கட்டமைப்பை மீள்கட்டமைத்தல்.**





- இன்றைய நிலையியற் செயற்குழுக்களை மீள்கட்டமைத்தலும் அவற்றின் பரிந்துரை விதிமுறைகளை பொருள்கோடல் செய்தலும்.
- வழங்கப்பட்டுள்ள பரிந்துரை விதிமுறைகளுடன் புதிய நிலையியற் குழுக்களையும் அலகுகளையும் நிறுவுதல்.
- ஊழுஏஐனு-19 தொற்று நிலைமையுடன் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல்.
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பயில்நிலையினர் 2019.'.2020 அணியின் அங்குரார்ப்பண நிகழ்வு ஊழுஏஐனு-19 சுகாதார வழிகாட்டிநெறிகளின் கீழ் 2020 அக்டோபர் 05 ஆந் திகதி நடைபெற்றது.
- ஊழுஏஐனு-19 தொற்றுநோய் மற்றும் வேறு அவசர வேளைகளில் ஏற்படக்கூடிய நிலைமைகளில் பணியாற்றுவதற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் அவசர முகாமைத்துவ அலகு நிறுவப்பட்டுள்ளது.
- தொழில்நுட்ப நிறுவகத்தின் தர உறுதிப்படுத்தல் அலகின் ஊடாக கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை இணையவழியில் வழங்குவதற்கான வழிகாட்டிநெறிகளைத் தயாரித்தல்.
- தொழில்நுட்ப நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்ப வசதிகள் அபிவிருத்தி அலகு நிறுவப்பட்டுள்ளதுடன், அது கல்வி நடவடிக்கைகளை இணையவழியில் விநியோகிப்பது சம்பந்தமான அனைத்துப் பணிகளிலும் உதவுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் விரிவுரை அறை கல்வி நடவடிக்கைகளை இணைய வழியில் விநியோகிப்பதற்கான வசதிகளை வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப நிறுவகத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்வி நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கல்வி ஆண்டுகளுக்கும் இணைய வழியில் விநியோகிக்கும் விதமாக இடம்பெறுகிறது.

- ❖ தெரிவுசெய்யப்பட்ட கற்கைத் துறைகளில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு 'வீட்டில் இருந்துகொண்டே வேலைசெய்தல்' என்ற எண்ணக்கருவை நிறுவ கல்விச் சபையின் விசேட அனுமதி பெறப்பட்டுள்ளது. தொழில்நுட்ப நிறுவகத்தின் பயிற்சி அலகு வழிகாட்டிநெறிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- ❖ இன்றைய நிலைவரம் காரணமாக சிறு மாணவர் அணிகளுக்கு (கற்கைத் துறை வாரியாக) அவர்களின் பாட அலகுகளை (மொடியூல்களை) பிரயோக, வெளிக்கள வேலைகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துவதற்கு கற்கை நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப நிறுவகத்தின் அவசர முகாமைத்துவ அலகினால் தயாரிக்கப்பட்ட சுகாதார நடப்பொழுங்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் சுகாதார அமைச்சினாலும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முறைசார்ந்த நிருவாகமொன்றைப் பேணுவதுடன் மாணவர்கள் மத்தியில் சிறந்த உளப்பாங்குகளைக் கட்டியெழுப்புவதற்குச் செயலாற்றுதல்.**

- ❖ ஒவ்வொரு தேசிய பல்கலைக்கழகமும் அணிகளுக்கிடையில் அவ்வப்போது பகிடிவதை மற்றும் மோதல்கள் ஏற்படும் ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுக்கிறது. இது வழமைநிலையை சற்று தாண்டிச் சென்றிருப்பதால் மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

- ❖ மாணவர்களின் போக்குவரத்து வழிகாட்டிநெறிச் செயற்பாடுகள், ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள், மாணவர்களின் சிறந்த உளப்பாங்குகளை ஏற்படுத்துவதற்கு வேறு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு மாணவர் பதவிநிலை அபிவிருத்தி அலகு (ளுளுனுரு) மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் கண்காட்சிகளை நடாத்துவதற்கு தொழில்நுட்ப நிறுவகம் கண்காட்சிக் குழுவை அமைத்துள்ளது. போதைப்பொருள்கள் போன்ற சட்டவிரோதமான சமூக அடிமைப்படல்கள் மீது மாணவர்களின் கவனம் ஈர்க்கப்படாமல் மாணவர்களின் நுண்ணிய திறன்களையும் புதிய திறன்களையும் தேர்ச்சிகளையும் விருத்திசெய்துகொள்வதற்கும் இது உறுதுணையாகும்.
- ❖ தொழில்நுட்ப நிறுவகத்தின் குறிப்பாக புதுமுக மாணவர்கள் பல்கலைக்கழக சூழலுக்கு பழக்கப்படும் காலப்பகுதியில் அம்மாணவர்களுக்கு இழைக்கப்படக்கூடிய இம்சைகளை ஒழித்துக்கட்டுவதற்கு 'பகிடிவதை எதிர்ப்புக் குழு' அமைக்கப்பட்டது.

**நிதி உறுதிப்பாடும் வருமான உருவாக்குகையும்**

- பொதுமக்களுக்கு உள்ளக வளங்களை ஊக்குவித்து வருமானங்களை உருவாக்குமுகமாக தொழில்நுட்ப நிறுவனம் வசதிகள் ஊக்குவிப்பு மற்றும் முகாமைத்துவ அலகை (ஐவருஆ-சீ ரூ ஆரு) நிறுவுதல்.
- தொழில்நுட்ப பரிசோதனைகள், குறுகிய கால கற்கைநெறிகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பணியாட்குழுவை ஊக்குவித்தலும், குறிப்பாக நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக நிகழ்நிலை (ழடெனெ) நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தலும்.
- குறுகிய கற்கைநெறிகளை விநியோகிப்பதை தரநியமப்படுத்துவதற்காக குறுகிய கால கற்கைநெறி மீளாய்வுக் குழுவொன்றை நிறுவுதல்.

**தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை மீள்கட்டமைத்தலும் டிப்ளோமாதாரிகளுக்கான தொழில்வாய்ப்புகளை விருத்திசெய்தலும்.**

- மிக்குயர் ளுடுஞுகு வரவேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு இன்றைய மூன்றாண்டு கால தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை மீள்கட்டமைப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. மூதவையின் சிபார்சுகளின் பேரில் தற்போதைய தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கலைத்திட்டத்தைத் திருத்தும் பணி ஏலவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- "பொறியியல் தொழில்நுட்பவலர்களின் நிகழ்ச்சித்திட்டத்தை சிட்னி ஒப்பந்தப்படி அபிவிருத்திசெய்தலும் படமாக்கலும்" பற்றிய செயலமர்வு, 2020 டிசம்பர் 05 ஆம் திகதி நடைபெற்றது. மொறட்டுவைப் பல்கலைக்கழக பேராசிரியர் கே.பீ.கருணாதாச அவர்கள் இதில் வளவாளராக விளங்கினார். மாணவர்கள், புலமையாளர்கள், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா முதலான மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி முக்கிய பங்கீடுபாட்டாளர்களாக இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.
- மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் உயர்மட்ட பட்டக் கற்கைநெறிகளை (மொறட்டுவைப் பல்கலைக்கழகம் ஊடாக தொழில் மார்க்கத்தை அமைத்தல்) கற்றல் குறித்து கற்கைச் சபையின் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் அனுமதிக்காக கருத்துருத் தாளொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# 12. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி - 2020





- பிரதான கட்டிடத்தையும் பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவையும் இணைக்கும், மழையின்போது பாதுகாக்கும் கூரையொன்றை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.
- உணவுச்சாலை மற்றும் விடுதிகளுக்கு இடையில் நடைபாதையில் (தரைச் சூன்ய மட்டம்) இறப்பர் நில விரிப்புகளைப் பொறுத்தும் பணி நிறைவடைந்துள்ளது. மாணவர்கள் அறிக்கையிட்டவாறு மழை பொழியும் வேளைகளில் வழுகத்தக்க இடங்கள் காரணமாக பல விபத்துக்கள் நேர்ந்துள்ளன.
- அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் திட்டமிடும், அபிவிருத்திசெய்யும் பணிகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப நிறுவகத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி அலகு நிறுவப்பட்டுள்ளது.
- மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் பரீட்சை மண்டபங்களை நிர்மாணிப்பதற்கு குறைந்த செலவிலான மாற்றுத்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. திட்டங்களைத் தயாரிக்கும் பணி தற்போது இடம்பெற்று வருகிறது.

## 13. மீண்டெழும் செலவின விபரம்

| விடயம் | 2019 (ரூ) | 2020 (ரூ) |
|---|---|---|
| அ) ஊழியர் பணிக்கொடை | 334@971@926.00 | 329@498@875.00 |
| ஆ) வான் செலவுகள் | 98@657.00 | 27@923.00 |
| இ) வழங்கல்கள் | 9@151@475.00 | 6@688@738.00 |
| ஈ) பராமரிப்புகள் | 9@044@461.00 | 7@482@974.00 |
| உ) ஒப்பந்தங்களும் சேவைகளும் | 92@887@175.00 | 87@718@257.00 |
| ஊ) பிற | 10@948@812.00 | 9@729@875.00 |
| மொத்தம் | **457@062@506.00** | **441@146@642.00** |

## *14.* மூலதனச் செலவின விபரம்

| விடயம் | 2019 (ரூ) | 2020 (ரூ) |
|---|---|---|
| அ) மரச் சாமான்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கையகப்படுத்தல் | 761@260.00 | 3@369@988.00 |
| ஆ) இயந்திராதிகளையும் பொறித்தொகுதிகளையும் கையகப்படுத்தல் | 46@820.00 | |
| இ) கட்டிடங்களையும் கட்டமைப்புகளையும் கையகப்படுத்தல் | | |
